**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், ஆடித்திங்கள் 32 ம் நாள்

**இ.ம.எண். 18/2026**

**in**

**அ.வ.எண். 130/2016**

சாமியாத்தாள் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பெரியம்மாள் (இறந்துவிட்டார்)
2. ராஜேஷ்
3. அழகேசன்
4. ஆறுமுகம்
5. மணி
6. உத்தமி
7. ஈஸ்வரன்
8. செந்தில்குமார்
9. பவித்ரா
10. சாமியாத்தாள்
11. குப்புசாமி நாடார் (இறந்துவிட்டார்)
12. மாரியம்மாள்
13. வடிவேல் (எ) ரவி
14. சுப்பிரமணி
15. சாந்தி
16. தனபாக்கியம்
17. லட்சுமி
18. தங்கவேல்
19. சொர்ணாத்தாள்
20. தனபாக்கியம்

21. ரத்தினம்
22. அர்சுனன்
23. பொன்னம்மாள்
24. முத்துப்பிள்ளை
25. முத்தாயம்மாள் (எ) முத்துப்பிள்ளை
26. துரைசாமி
27. குழந்தாயம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 17.08.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.S.ராமகிருஷ்ணன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 6, 7, 9, 12, 13, 26 மற்றும் 27 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 2, 3 முதல் 5, 8, 10, 14 முதல் முதல் 25 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.,

<u>உத்தரவு</u>

மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1 ஐ ரீகால் செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :–</u>

i) அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம்

பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உபயவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் வழக்கு விசாரணை சமயத்தில் வா.சா.ஆ.6 ஆவணமாக அ.வ.எண்.110/2008 ன் தீர்ப்புரை மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்பாணை கிடைக்காத காரணத்தால் அதை தாக்கல் செய்ய இயவில்லை. தற்போது மேற்படி தீர்ப்பாணையை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. வாதி தரப்பில் சாட்சி கடந்த 15.07.2026 ம் தேதி முடிக்கப்பட்டுள்ளதால் வாதி தரப்பில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட சாட்சியை மீண்டும் ரீகால் செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே வா.சா.1 ஐ ரீகால் செய்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

<u>2. 6 ம் எதிர்மனுதாரர்/6 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 7, 9, 12, 13, 26 மற்றும் 27 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம் :-</u>

i) மனுதாரர் மனு பொய் மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இவ்வெதிர் உரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்ட மற்ற சங்கதிகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டியது.

ii) மனுதாரர் உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/வாதி கடந்த 2016 ல் வழக்கு தாக்கல் செய்து 10 வருடங்கள் முடிவடைந்த நிலையில் கடந்த 5 வருடங்களுக்கு முன்பே மனுதாரர்/வாதி அவரது விசாரணையின்போது அ.வ.எண்.110/2008 ல் வழக்குரை நகலை தாக்கல் செய்துவிட்டு தற்போது காலதாமதத்துடன் தீர்ப்பாணையை தாக்கல் செய்வது எந்த வகையிலும்

ஏற்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**<u>5. தீர்வு:–</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர் தரப்பில் வழக்கு விசாரணை சமயத்தில் வா.சா.ஆ.6 ஆவணமாக அ.வ.எண்.110/2008 ன் தீர்ப்புரை மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தற்போது மேற்படி வழக்கின் தீர்ப்பாணையை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது என்றும் வாதி தரப்பில் சாட்சி கடந்த 15.07.2026 ம் தேதி முடிக்கப்பட்டுள்ளதால் வாதி தரப்பில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட சாட்சியை மீண்டும் ரீகால் செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 6, 7, 9, 12, 13, 26 மற்றும் 27 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்/வாதி கடந்த 2016 ல் வழக்கு தாக்கல் செய்து 10 வருடங்கள் முடிவடைந்த நிலையில் கடந்த 5 வருடங்களுக்கு முன்பே மனுதாரர்/வாதி அவரது விசாரணையின்போது அ.வ.எண்.110/2008 ல் வழக்குரை நகலை தாக்கல் செய்துவிட்டு தற்போது காலதாமதத்துடன் தீர்ப்பாணையை தாக்கல் செய்வது எந்த வகையிலும் ஏற்கத்தக்கதல்ல என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 17.11.2016 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 13.03.2017 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 10.10.2022 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 22.11.2022 அன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 04.07.2026 அன்று வா.சா.ஆ.9 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 07.07.2026 அன்று வா.சா.2 விசாரிக்கப்பட்டு, கடந்த 15.07.2026 அன்று வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, கடந்த 24.07.2026 அன்று பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 04.08.2026 அன்று பி.வா.சா.2 விசாரிக்கப்பட்டு, கடந்த 07.08.2026 அன்று பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, அசல் வழக்கானது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 14.08.2026 அன்று அசல் வழக்கை மறுதிறப்பு செய்யக்கோரி இ.ம.எண்.17/2026 என்ற மனுவும், வா.சா.1ஐ ரீகால் செய்யக்கோரி இ.ம.எண்.18/2026 என்ற மனுவும், ஆவணம் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கக்கோரி இ.ம.எண்.19/2026 என்ற மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. 6, 7, 9, 12, 13, 26 மற்றும் 27 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடந்த 5 வருடங்களுக்கு முன்பே மனுதாரர்/வாதி அவரது விசாரணையின்போது அ.வ.எண்.110/2008ல் வழக்குரை நகலை தாக்கல் செய்துவிட்டு தற்போது

காலதாமதத்துடன் தீர்ப்பாணையை தாக்கல் செய்வது எந்த வகையிலும் ஏற்கத்தக்கதல்ல என்றும் சொல்லப்பட்டிருந்தாலும், அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மனுதாரர் இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவில் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யும் ஆவணம் குறித்து வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பும் வசதியும் உள்ளதாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் அசல் வழக்கானது வாதி தரப்பு வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் தரப்பில் வா.சா.1 ஐ ரீகால் செய்ய வேண்டி மிகவும் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்/வாதி, 6, 7, 9, 12, 13, 26 மற்றும் 27 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ரூ.2,000/−ஐ (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலவு தொகையாக வரும் 19.08.2026 ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 19.08.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026−ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.08.17 19:54:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.08.17 19:54:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.